## அத்தியாயம் 8

## தமிழ் நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை

### 1. நிலமற்ற ஏழை விவசாய தொழிலாளர் குடும்பங்களுக்கு அரசு தரிசு நிலங்களை இலவசமாக வழங்கும் திட்டம்

இத்திட்டம் 2006–07ஆம் ஆண்டு தமிழக அரசால் அறிவிக்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிலங்கள் மூன்று இனங்களாக வகை செய்யப்பட்டுள்ளது.

இனம் I: எந்தவித ஆக்கிரமிப்பும் இல்லாத அரசு தரிசு நிலங்கள்

இனம் II: சிறு மற்றும் குறு விவசாயிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட அரசு தரிசு நிலங்கள்

இனம் III: சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு சொந்தமான பட்டா தரிசு நிலங்கள்

**திட்டத்தின் நோக்கங்கள்:**

I. தரிசு நிலங்களை கண்டறிந்து, மேம்பாடு தேவைப்படும் நிலங்களை தக்க முறையில் செம்மைபடுத்தி நிரந்தர வருவாய் மற்றும் இலாபகரமான சாகுபடிக்கு உகந்த நிலங்களாக மாற்றி நிலமற்ற ஏழை தொழிலாளர் குடும்பங்களுக்கு பட்டா வழங்குதல்.

II. இனம் I மற்றும் IIன் கீழ் 10 ஏக்கர் மற்றும் அதற்கு மேற்பட்டு ஒரே தொகுப்பாக உள்ள நிலங்களில் நீர் ஆதாரம் இருப்பின், நில மேம்பாடு செய்து, ஆழ்குழாய் கிணறு அமைத்து இலவச மின்சாரத்துடன், சொட்டு நீர்பாசன வசதி செய்து, தரம் வாய்ந்த பழமரக் கன்றுகள் நடவு செய்து விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

III. சிறு மற்றும் குறு விவசாயிகளின் தரிசு /புஞ்சை பட்டா நிலங்கள் சேர்ந்து 50 ஏக்கர் மற்றும் அதற்கு மேற்பட்டு ஒரே தொகுப்பாக உள்ள நிலங்களில் சிறு மற்றும் குறு விவசாயிகள் தாமே முன் வந்தால் அந்நிலங்களில் நீர் ஆதாரம் இருப்பின், நில மேம்பாடு செய்து, ஆழ்குழாய் கிணறு அமைத்து, இலவச மின்சாரத்துடன் சொட்டு நீர்பாசன வசதி செய்து, தரம் வாய்ந்த பழமரக் கன்றுகள் நடவு செய்து நிரந்தர விளைநிலமாக ஆக்கப்படுகிறது.

IV. 10 ஏக்கர் மற்றும் அதற்கு மேல் உள்ள தொகுப்பு நிலம், 50 ஏக்கர் மற்றும் அதற்கு மேல் உள்ள தொகுப்பு நிலங்களில் அமைக்கப்படும் ஆழ்குழாய் கிணற்றுடன் கூடிய சொட்டு நீர் பாசன அமைப்பினை பராமரிக்க, அத்தொகுப்பில் பயனாளிகள் சங்கம் அமைத்து, அந்த பாசன அமைப்பு அச்சங்கத்திடம் ஒப்படைக்கப்படும். நீர்வளம் இல்லை யெனில் விவசாயிகள் விருப்பத்திற்கு ஏற்ப உயிர் எரிசக்தி மரக்கன்றுகள் மற்றும் தீவனப் பயிர்கள் நடவு செய்து தரப்படுகிறது.

**சாதனை:**

**அ. நில மேம்பாடு**

வருவாய் துறை மூலம் தேர்வு செய்யப்படும் தரிசு நிலங்களில் நில மேம்பாடு தேவைப்படும் பரப்புகள் வேளாண் பொறியியல் துறை மூலம் மேம்படுத்தப்படுகிறது. நில மேம்படுத்தப்பட வேண்டிய **51,559** ஏக்கரில் இது வரை **51,337** ஏக்கர் மேம்படுத்தப்பட்டுள்ளது. நிலத்தடி நீரை பெருக்கிடவும், பாசனத்திற்காகவும் **15** x **3** x **1.5** கன மீட்டர் அல்லது **15** x **6** x**1.5** கன மீட்டர் அளவுள்ள பண்ணைக்குட்டைகளுக்கு முறையே ரூ.**2,750/–** மற்றும் ரூ.**4,650/–** மானியத்தில் அமைத்து தரப்படுகிறது. பிற துறைகளை ஒருங்கிணைத்து இத்திட்டத்தின் கீழ் **21,205** பண்ணை குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளது.

| செயல் சாதனை (பரப்பு ஏக்கரில்) | | | | |
|---|---|---|---|---|
| திட்ட செயல்பாடு | இதுவரை அளிக்கப்பட்ட பரப்பு | பயனாளிகள் எண்ணிக்கை | மேம்படுத்தப்பட வேண்டிய பரப்பு | மேம்படுத்தப்பட்ட பரப்பு |
| முதற்கட்டம் (17.9.06) | 25,282.11 | 24,358 | 11,122.00 | 11,122.00 |
| இரண்டாம்கட்டம் (17.12.06) | 25,805.53 | 26,749 | 8,078.00 | 8,078.00 |
| மூன்றாம் கட்டம் (17.3.07) | 26,029.61 | 20,648 | 5,490.00 | 5,490.00 |
| நான்காம் கட்டம் (17.6.07) | 24,506.00 | 19,821 | 6,763.00 | 6,763.00 |
| ஐந்தாம் கட்டம் (17.9.07) | 32,065.61 | 24,932 | 6,547.00 | 6,547.00 |
| ஆறாம் கட்டம் (29.12.07) | 26,982.62 | 21,487 | 5,411.00 | 5,411.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| ஏழாம் கட்டம் (17.3.08) | 18,040.14 | 18979 | 2,635.00 | 2,507.00 |
| எட்டாம் கட்டம் (17.6.08) | 12,901.00 | 4355 | 1,058.00 | 1,034.00 |
| ஒன்பதாம் கட்டம்(17.9.08) | 16,493.00 | 11948 | 995.00 | 925.00 |
| பத்தாம் கட்டம் (17.11.08) | 2,028.38 | 1664 | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது | |
| ஒருங்கிணைப்பு | - | - | 3,460,00 | 3,460 |
| **மொத்தம்** | **2,10,134.35** | **1,74,941** | **51,559.00** | **51,337.00** |

**ஆ. 10 ஏக்கர் மற்றும் அதற்கு மேற்பட்ட தொகுப்பு நில மேம்பாடு:**

இத்திட்டத்தில் இதுவரை இனம் I மற்றும் இனம் IIல் உள்ள **142** தொகுப்பு நிலங்களில் உள்ள **2,609.23** ஏக்கரில், **102** தொகுப்பு நிலங்களில் **1937.27** ஏக்கர் மேம்படுத்தப்பட்டு பழ மரக்கன்றுகள் நடப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. ஏனைய **40** தொகுப்பு நிலங்களில் உள்ள **671.96** ஏக்கர் நிலங்களில் மேம்பாட்டு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இத்தொகுப்பு நில மேம்பாட்டுக்காக ரூ.**631.92** இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

தொகுப்பு நிலங்களில் உள்ள **1517** விவசாயிகளுக்கு உர நிர்வாகம், சொட்டு நீர் பாசனம், நடவு பற்றிய தொழில் நுட்ப பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. மேலும் தொகுப்பு நில மேம்பாட்டில் உள்ள பொது கட்டமைப்புகள் பராமரித்தல் பற்றியும் விளக்கப்படுகிறது.

**இ. 50 ஏக்கர் மற்றும் அதற்கு மேல் தொகுப்பாக உள்ள தனியார் பட்டா தரிசு/புஞ்சை நில மேம்பாடு**

சிறு குறு விவசாயிகளுக்கு சொந்தமான **50** ஏக்கருக்கு மேலாக உள்ள பட்டா தரிசு நிலங்களில் பழ மரம் மற்றும் உயிர் எரிசக்தி மரப்பயிர் தொகுப்புகளை ஏற்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது. இத்தொகுப்பு நிலங்களில் ஆழ்குழாய் கிணறு அமைத்து சொட்டு நீர் பாசன வசதியுடன் இலவச மின்சாரம் வழங்கி உயர் வருவாய் அளிக்கும் பழமர கன்றுகள் இலவசமாக நடவு செய்து வழங்கப்படுகிறது. நிலத்தடி நீர் குறைவாக உள்ள இடங்களில் உயிர் எரிசக்தி மரக்கன்றுகள் நடவு செய்யப்படுகிறது. இதுவரை **42** தொகுப்பு நிலங்களில் உள்ள **2347.4** ஏக்கர் பரப்பில் உள்ள, **4** தொகுப்பு நிலங்களில் **222.63** ஏக்கர் மேம்படுத்தப்பட்டு மரக்கன்றுகள் நடப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. ஏனைய **38** தொகுப்பு நிலங்கள் அடங்கிய **2124.77** ஏக்கரில் மேம்பாட்டு பணிகள் நடைபெற்று

வருகின்றன. இத்தொகுப்பு நிலமேம்பாட்டுக்காக ரூ.575.27 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 1539 விவசாயிகள் பயனடைய உள்ளனர்.

**செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்:**

சென்னை மற்றும் நீலகிரி நீங்கலாக இதர அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது.

**நிதி சாதனை:**

இத்திட்டத்தில் ரூ.2555.28 இலட்சம் செலவில் தரிசு நிலங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளது.

நிலமற்ற ஏழை விவசாய தொழிலாளர்கள், சிறு மற்றும் குறு விவசாயிகள் பயன் பெறும் வகையில் இத்திட்டம் 2009–10ஆம் ஆண்டு செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின் மூலம் நிலமற்ற ஏழை விவசாய தொழிலாளர்கள், சிறு மற்றும் குறு விவசாயிகளின் வருவாய் அதிகரித்து அவர்களின் வாழ்க்கை தரம் மேலும் மேம்படுத்தப்படவுள்ளது.

**2. தேசிய மானாவாரி நீர்வடிப்பகுதி மேம்பாடு திட்டம் (நவப்ரா)**

தேசிய மானாவாரி நீர்வடிப்பகுதி மேம்பாடு திட்டம் (நவப்ரா) தமிழகத்தில் 8வது ஐந்தாண்டு திட்ட காலத்திலிருந்து (1990–91) செயல்படுத்தப்பட்டு வருகிறது இத்திட்ட செலவினத்தை மத்திய மற்றும் மாநில அரசுகள் முறையே 90% மற்றும் 10% என்ற சத அளவில் பகிர்ந்து கொள்கின்றன.

**குறிக்கோள் :**

- ❖ இயற்கை வளங்களை பேணி பாதுகாத்து, பெருக்கி திறம்பட பயன்படுத்துதல்
- ❖ வேளாண்மை உற்பத்தியை நீடித்து பெருக்குதல்
- ❖ பசுமை தரும் மரங்கள், தாவரங்களை வளர்த்து நலிவடைந்துள்ள இயற்கை சூழலை மேம்படுத்துதல்.
- ❖ மானாவாரி மற்றும் பாசன நிலங்களுக்கிடையே உள்ள மகசூல் வேறுபாட்டினை களைதல்
- ❖ கிராமப்புற வேலை வாய்ப்பைப் பெருக்குதல்

இத்திட்டம் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை வழியாக கிராம அளவில், நீர்வடிப்பகுதி சங்கங்கள் / குழுக்கள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. பத்தாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் இத்திட்டத்தின் கீழ் அடைந்த சாதனை பின்வருமாறு :

| ஐந்தாண்டு திட்டம் | வருடம் | மாவட்டங் களின் எண் ணிக்கை | நீர்வடிப்பகுதி எண்ணிக்கை | நிதி செலவினம் (ரூ.இலட் சத்தில்) | பரப்பு எக்டரில் |
|---|---|---|---|---|---|
| X | 2002 - 03 | 23 | 755 | 1407.06 | 31268 |
| | 2003 - 04 | | | 1525.00 | 33888 |
| | 2004 - 05 | | | 2089.06 | 46424 |
| | 2005 - 06 | | | 1990.16 | 44227 |
| | 2006 - 07 | | | 3738.70 | 83082 |
| | 2007 - 08 | | | 2315.21 | 51449 |
| | **மொத்தம்** | | | **13065.19** | **290338** |

**11 வது ஐந்தாண்டு திட்டம்**

11வது ஐந்தாண்டு திட்ட காலத்தில், 200 புதிய நீர்வடிப்பகுதிகளில் 1,00,000 எக்டர் நிலப்பரப்பினை மேம்படுத்த ரூ60.00 கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

| ஐந்தாண்டு திட்டம் | வருடம் | மாவட்டங் களின் எண்ணிக்கை | நீர்வடிப் பகுதி எண்ணிக் கை | நிதி செலவினம் (ரூ.இலட் சத்தில்) | பரப்பு எக்டரில் |
|---|---|---|---|---|---|
| XI | 2007 - 08 | 18 | 200 | 1076.08 | 17935 |
| | 2008 - 09 | | | 1000.00 | 9167 |

**2009-10 ஆண்டுத் திட்டம்**

பதினோராவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில், 2009–10ஆம் ஆண்டில் 16667 எக்டர் நிலப்பரப்பு, ரூ.10.00 கோடி செலவில் இத்திட்டத்தின் கீழ் பண்படுத்தப்படவுள்ளது.

### 3. நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதி - நபார்டு

நபார்டு வங்கி உதவியுடன் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதி திட்டம், 6 ஆண்டு திட்ட காலத்தில் 2004–2005 ஆம் ஆண்டு முதல் ரூ.60 கோடி மதிப்பீட்டில் 100 நீர்வடிப்பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**குறிக்கோள்**

1. நீர்வடிப்பகுதி பங்கேற்பு தொடர்பான செய்திகளை பரப்புதல்.
2. அரசு, அரசு சார்ந்த மற்றும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களை இத்திட்டத்தில் பங்கேற்க செய்தல்.
3. இத்திட்டம் செயல்படுத்தப்படும் பகுதிகளின் தேவைக்கேற்ப நீர்வடிப்பகுதிகளை மேம்படுத்த நீர்வடிப்பகுதி சங்கங்கள் மற்றும் நீர்வடிப்பகுதி குழுக்களை உருவாக்குதல்.

**திட்ட காலம்**

| | |
|---|---|
| 1. கொள்திறன் வளர்ப்பு நிலை (50 முதல் 100 எக்டேர்) | – 18 மாதங்கள் |
| 2. சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்க | – 6 மாதங்கள் |
| 3. திட்ட செயலாக்கம் / முழு செயல்பாட்டு நிலை | – 3 வருடங்கள் |
| மொத்த காலம் | – 5 வருடங்கள் |

**நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதியின் இனங்கள்**

21.11.2007 முதல் புதிய திட்ட வழிமுறையின் படி செயல்படுத்தப்படுகிறது.

1. நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதியின் கொள் திறன் வளர்ப்பு நிலை பணிகளுக்கு 100 சதவிகிதம் நபார்டு வழங்கும் மானியமாகும்.
2. நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதியின் முழு செயல்பாட்டு நிலை பணிகளுக்கு 50 சதவிகிதம் மாநில அரசுக்கு நபார்டு வழங்கும் கடன் மற்றும் 50 சதவிகிதம் நபார்டு வழங்கும் மானியமாகும். இதனால் மொத்த நீர்வடிப்பகுதிகள் 100 லிருந்து 150 ஆக உயர்ந்துள்ளது.
3. வட்டி விகிதம் – 4.5%
4. திருப்பி செலுத்தும் காலம் – ஒன்பது ஆண்டுகள் (3 ஆம் ஆண்டு முதல் திருப்பி செலுத்த வேண்டும்)

**திட்ட செயலாக்க பகுதி**

நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதி திட்டம் கீழ்காணும் 23 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கோயம்புத்தூர், கடலூர், தர்மபுரி, திண்டுக்கல், காஞ்சிபுரம், கரூர், கிருஷ்ணகிரி, மதுரை, சேலம், நாமக்கல், திருச்சி, பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, தேனி, தூத்துக்குடி, திருநெல்வேலி, திருவள்ளூர், திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம், விருதுநகர்.

மாநில வழிகாட்டுதல் குழுவால் தேர்வு செய்யப்படும் நீர்வடிப் பகுதிகளை தவிர்த்து இராமநாதபுரம், திண்டுக்கல், தூத்துக்குடி, திருச்சி மற்றும் நாகப்பட்டினம் ஆகிய 5 மாவட்டங்களிலும் பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கான ஒருங்கிணைந்த மேம்பாட்டு முன்னோடித்திட்டத்தின் கீழ் நபார்டு வங்கி மூலம் முழு மானியத்தில் 5 நீர்வடிப்பகுதிகளில் பண்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

2009–10 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும் புதிய முழு செயல்பாட்டு நிலையில் பல்வேறு இனங்களுக்கு நிலையான நிதி ஒதுக்கீடு

| | | | |
|---|---|---|---|
| 1. ஒரு எக்டருக்கான செலவு | – | | ரூ.12,000.00 |
| 2. திட்ட செயலாக்கம் | – | 70% | ரூ. 8,400.00 |
| 3. நிர்வாகச் செலவு | – | 10% | ரூ. 1,200.00 |
| 4. நிலமற்ற விவசாயி மற்றும் பெண்களின் வாழ்க்கை தர மேம்பாட்டுக்கு | – | 7.5% | ரூ. 900.00 |
| 5. சமூக ஒருங்கிணைப்பு மற்றும் பயிற்சி | – | 12.5% | ரூ. 1,500.00 |

**திட்ட செயலாக்கம்**

2004–05 மற்றும் 2005–06 ஆண்டுகளில் 100 நீர்வடிப் பகுதி திட்டங்கள் மாநில வழி காட்டுதல் குழுவால் தேர்வு செய்யப்பட்டது.

இத்திட்டத்தின் முதல் 18 மாதங்களில் கொள் திறன் வளர்ப்பு நிலை பணிகளும், பின்னர் 6 மாதங்களில் சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கும் பணிகளும் முதல் இரண்டு ஆண்டுகளில் நபார்டு வங்கியின் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

மூன்றாம் ஆண்டு முதல் தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமைக்கு இத்திட்டங்கள் முழு செயலாக்கம் மேற்கொள்ள நபார்டு வங்கி மூலம் ஒப்படைக்கப்பட்டது.

| ஆண்டு | முழு செயலாக்கப் பணி மேற்கொள்ள நபார்டு வங்கி ஒப்படைத்த நீர்வடிப் பகுதிகளின் எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) | பண்படுத்தப் பட்ட பரப்பு (எக்டேரில்) | நபார்டு வங்கியிடம் ஒப்படைக்கப்பட்ட நீர்வடிப் பகுதிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 2005-06 | 10 | 115.49 | 1925 | -- |
| 2006-07 | 15 | 219.61 | 3660 | -- |
| 2007-08 | -- | 173.13 | 3727 | 12 |
| 2008-09 | 10 | 200.61 | 3345 | -- |

15 நீர்வடிப்பகுதிகள் முழு செயலாக்கம் மேற்கொள்ள தேர்வு செய்யப்பட்டு நபார்டு வங்கியால் 2009–10ஆம் ஆண்டில் தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையிடம் ஒப்படைக்கப்படும்.

வரும் நிதியாண்டில் (2009–10) தற்பொழுது செயல்படுத்தப்பட்டு வரும் 23 முழு செயலாக்க நிலையிலுள்ள நீர்வடிப்பகுதிகளில் ரூ.112.50 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 1,875 எக்டர் பரப்பளவு பண்படுத்தப்படவுள்ளது.

### 4. தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம் - ராஷ்ட்டிரிய கிருஷி விகாஸ் யோஜனா

தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டமானது, வேளாண்மை தொகுப்பில் ஆண்டுக்கு 4ரூ வளர்ச்சி அடைய செயலாக்கப்படுகிறது. வேளாண்மையில், விவசாயிகள் அதிக அளவு பங்கேற்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். விவசாயிக்கு முக்கிய பயிரிலிருந்து கிடைக்கும் உற்பத்தியில் ஏற்படும் குறைபாடுகளை குறைத்திட நவீன தொழில்நுட்பங்கள் வழங்குவதுடன் விவசாயிக்கு அதிக வருமானமும், விவசாயத்தில் மட்டுமல்லாது விவசாயத்தை சார்ந்த இதர உபதொழில்களிலும் அதிக உற்பத்தி மற்றும் உற்பத்தி திறன் பெற்றிட வழிவகுக்கிறது. இத்திட்டம் மத்திய அரசின் 100% நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் வேளாண்மை,

கால்நடை, பால் உற்பத்தி, மீன் வளம் மற்றும் பாசன மேம்பாடு ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது.

2008–2009ம் ஆண்டில் ஈரோடு, வேலூர், திருவண்ணாமலை, திருச்சி, கடலூர், சிவகங்கை, விருதுநகர், தேனி மற்றும் திருநெல்வேலி ஆகிய 9 மாவட்டங்களில் சிறப்புக் கவனம் செலுத்தப்படுகிறது. இத்திட்டம் செயல்படுத்தும் துறைகளான வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண்மை பொறியியல், பொதுப்பணித் துறை, மீன் வளம், கால்நடை, பால் வளம், தமிழ்நாடு கால்நடை பல்கலைக்கழகம் மற்றும் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் ஆகியவைகளுக்கு தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை ஒருங்கிணைப்பு முகமையாக திகழ்கிறது.

தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம், தமிழ் நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் மூலம் கீழ்கண்ட திட்டங்கள் செயலாக்கப்படுகிறது :

(i) **பட்டாவுடன் கூடிய ஒட்டுமொத்த 50 ஏக்கரும் அதற்கு மேலும் உள்ள புஞ்சை மானாவாரி தொடர் தொகுப்பு நிலங்களில் பழ மர கன்றுகள்/மர பயிர் கன்றுகள் நட்டு நிலங்களை**

**மேம்படுத்தும் திட்டம்**

ஒட்டுமொத்த 50 ஏக்கரும் அதற்கு மேலும் உள்ள புஞ்சை மானாவாரி பரப்பில் விவசாயிகளின் விருப்பத்திற்கு ஏற்றவாறு பாசன வசதி உள்ள நிலத்தில் தோட்டக்கலை பயிர்களும் இதர பரப்பில் உயிர் எரிசக்தி மரக்கன்றுகளும் நடவு செய்து வழங்கப்படுகிறது. இத்திட்டம் 9 மாவட்டங்களில் ஒட்டுமொத்தமாக 50 ஏக்கர் மற்றும் அதற்கு மேல் பரப்பில் திட்ட வழிமுறைகளின்படி செயலாக்கப்படுகிறது. 2007–08 ஆம் ஆண்டில் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட 35 தொடர் தொகுப்புகளில் மார்ச் 09 வரை 34 தொடர் தொகுப்புகள் 1910 ஏக்கர் பரப்பளவில் மானாவாரி நிலங்களில் மேம்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு ரூ.421.24 இலட்சம் நிதி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 1152 சிறு மற்றும் குறு விவசாயிகள் பயன் பெறுகிறார்கள். தற்போது அத்தொடர் தொகுப்புகளில் மரக்கன்றுகள் நடும் பணி நடைபெற்று வருகிறது.

இத்திட்டம் 2008–2009ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட 9 மாவட்டங்களான ஈரோடு, வேலூர், திருவண்ணாமலை, திருச்சி, கடலூர், சிவகங்கை, விருதுநகர், தேனி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் மொத்தம் 27 மானாவாரி (புஞ்சை) தொடர் தொகுப்புகள் அமைத்து சிறு மற்றும் குறு விவசாயிகள் பயன் அடைய செயல்படுத்தபடுகிறது. இதற்கென ரூ.364.78 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ii) **மேலாண்மை தகவல் தொழில் நுட்ப முறை** (Management Information System)

தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மேலாண்மை தகவல் தொழில் நுட்ப முறை, தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமையால் மாநில மற்றும் மாவட்ட அளவில் ரூ.30.84 இலட்சம் செலவில் வலைதளம் மூலம் மதிப்பீடு செய்யும் பணி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம்**

வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளுக்கான திட்டம் 1972–73 ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் நீர்வடிப்பகுதிகளிலுள்ள பயிர் உற்பத்தி, நில, நீர் மற்றும் மனித வளம் ஆகியவற்றின் உற்பத்தி திறன் போன்றவற்றுக்கு வறட்சியினால் ஏற்படக்கூடிய மோசமான விளைவுகளை குறைப்பதாகும். இத்திட்டம் நீர்வடிப் பகுதி அணுகுமுறையில் மக்களின் பங்கேற்போடு மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி 1995–96 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தற்போது கோயம்புத்தூர், தருமபுரி, திண்டுக்கல், கரூர், கிருஷ்ணகிரி, நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், சிவகங்கை, திருவண்ணாமலை, தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, வேலூர், மற்றும் விருதுநகர் ஆகிய 17 மாவட்டங்களில் உள்ள 80 ஊராட்சி ஒன்றியங்கள் வறட்சியால் பாதிக்கப்படும் பகுதிகள்

என்று மத்திய அரசால் அறிவிக்கை செய்யப்பட்டு அந்தப்பகுதிகளுக்கு வறட்சியால் ஏற்படும் பாதிப்புகளில் இருந்து பாதுகாக்கும் பொருட்டு இத்திட்டத்தின் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திட்டச் செயலாக்க முறைகளில் மாற்றம் செய்யப்பட்டு அரசு துறைகளின் மூலம் செய்யப்பட்டு வந்த பணிகள் தற்போது அரியாலி நெறிமுறையின்படி ஊராட்சி மன்றம் மற்றும் பயனாளி குழுக்கள் இணைந்து பணிகளை தேர்வு செய்து அவர்கள் மூலமாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்ட செயலாக்கத்திற்கான செலவினத்தை மத்திய மற்றும் மாநில அரசுகள் தற்சமயம் 75:25 என்ற விகிதாசாரத்தின் அடிப்படையில் ஏற்கின்றன. ஒரு எக்டர் மேம்பாட்டிற்கான செலவினத் தொகையாக ரூ.6,000/– அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் மேற்கொள்ளப்படும் பணிகள் அனைத்தும் திட்ட செலவினத்திலேயே மேற்கொள்ளப் பட்டாலும், பயனாளிகளின் பங்குத் தொகையாக 10 சதவீதம் பெறப் படுகிறது. சமூகப்பணிகள் மற்றும் தாழ்த்தப்பட்ட, பழங்குடியின ருக்கான பணிகளில் பங்களிப்பு 5 சதவீதம் ஆகும்.

வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளுக்கான திட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பணிகள் கீழ்கண்ட சிறப்பு அம்சங்களையும், செயல்பாடுகளையும் உள்ளடக்கியதாகும்.

நிலமேம்பாடு: நிலம் சமன்படுத்துதல், சமஉயர வரப்பு அமைத்தல், வண்டல் மண் அடித்தல், கல்வரப்பு அமைத்தல், தடுப்புச் சுவர் அமைத்தல், கோடை உழவு, தாவர வரப்பு அமைத்தல் மற்றும் தொடர் குழி எடுத்தல்.

நீர்வளமேம்பாடு: கால்நடைக்குட்டை அமைத்தல், பண்ணைக் குட்டை அமைத்தல், ஊரணி அமைத்தல், குளங்கள் தூர்வாருதல், வரத்துக்கால்வாய் அமைத்தல் மற்றும் சீரமைத்தல், தடுப்பணைகள் கட்டுதல், கசிவுநீர் குட்டை அமைத்தல், மற்றும் குடிநீர் ஆதாரமேம்பாடு செய்தல்.

தாவரவள மேம்பாடு: வேளாண் காடுகள் அமைத்தல், பழமரக்கன்றுகள் நடுதல், தீவனபயிர் மேம்பாடு செய்தல், செயல் விளக்கப்பாத்தி அமைத்தல், சமுதாய நாற்றாங்கால் பண்ணை அமைத்தல், சமூக காடுகள் வளர்த்தல் மற்றும் வீட்டுத் தோட்டம் அமைத்தல்.

இத்திட்டத்தின்கீழ் நீர்வடிப் பகுதிகள் மத்திய அரசால் அணிவாரியாக ஒப்பளிப்பு செய்யப்படுகின்றன. திட்டத்தின் செயலாக்கக் காலம் ஒப்பளிப்பு செய்யப்பட்ட காலத்திலிருந்து ஐந்து ஆண்டுகள் ஆகும். இத்திட்டத்தின்கீழ் **1999–2000** ஆம் ஆண்டு முதல் **2006–07** ஆம் ஆண்டு முடிய மொத்தம் **7** அணிகளில் **1222** நீர்வடிப் பகுதிகளில் ரூ.**33,670.00** இலட்சம் திட்ட மதிப்பீட்டில் **6,14,142** எக்டர் நிலத்தை மேம்படுத்த இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. இதுவரை **(31.03.2009)** இத்திட்டத்திற்கு மத்திய மற்றும் மாநில அரசுகள் ரூ.**25,357.69** இலட்சத்தை விடுவித்துள்ளன. இதில் ரூ.**23,417.56** இலட்சம் **17** மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளால் செலவு மேற்கொள்ளப்பட்டு **4,28,938** எக்டர் நிலம் மேம்படுத்தப் பட்டுள்ளது. தற்போது செயல்படுத்தப்படும் **1222** நீர்வடிப் பகுதிகள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | (ரூ. இலட்சத்தில்) |
|---|---|
| செயல்பாட்டிலுள்ள திட்டங்களின் எண்ணிக்கை | 1222 |
| திட்டமதிப்பீடு | 33,670.00 |
| மத்திய அரசு | 25,252.50 |
| மாநில அரசு | 8,417.50 |
| விடுவிக்கப்பட்ட தொகை (மார்ச் 2009 வரை) | 25,357.69 |
| மத்திய அரசு | 19,174.73 |
| மாநில அரசு | 6,182.96 |
| செலவு செய்த தொகை (மார்ச் 2009 வரை) | 23,417.56 (92%) |
| மார்ச் 2009 வரை விடுவிக்கப்பட்ட தொகைக்கு மேம்படுத்த வேண்டிய பரப்பு (எக்டரில்) | 4,65,970 |
| மேம்படுத்தப்பட்ட பரப்பளவு (மார்ச் 2009 வரை) (எக்டரில்) | 4,28,938 (92%) |

வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளின் திட்டச் செயலாக் கத்திற்காக 2008–09 ஆம் ஆண்டு மத்திய அரசு ரூ.3,549.24 இலட்சமும், மாநில அரசு தன் பங்காக ரூ.998.50 இலட்சமும் விடுவிக்கப்பட்டு இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்**

ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் தமிழகத்தில் 1993–94 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நீர்வடிப்பகுதி அணுகுமுறையில் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் செயல்படுத்தப்படாத வட்டாரங்களில் வனம் அல்லாத தரிசு நிலங்களை மேம்படுத்த இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் மழைநீரை சேமித்து அதன் உதவியுடன் தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றுவதாகும்.

1995ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் பொது நெறிமுறையின் கீழ் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் போல், இத்திட்டமும் கொண்டு வரப்பட்டு தற்போது அரியாலி நெறிமுறையின்படி ஊராட்சி மன்றம் மற்றும் பயனாளி குழுக்கள் இணைந்து பணிகளை தேர்வு செய்து அவர்கள் மூலமாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டச் செயலாக்க காலம் ஐந்தாண்டுகளாகும். ஒரு எக்டருக்கான மேம்பாட்டுச் செலவினத் தொகையாக ரூ.6,000/– அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள் அனைத்தும் திட்ட செலவினத்திலேயே மேற்கொள்ளப் பட்டாலும், பயனாளிகளின் பங்குத் தொகையாக 10 சதவீதம் பெறப்படுகிறது. சமூகப்பணிகள் மற்றும் தாழ்த்தப்பட்ட, பழங்குடியின ருக்கான பணிகளில் பங்களிப்பு 5 சதவீதம் ஆகும். இத்திட்டச் செயலாக்கத்திற்கான செலவினத்தை மத்திய மற்றும் மாநில அரசுகள் 11 : 1 என்ற விகிதாசாரத்தின் அடிப்படையில் ஏற்கின்றன.

தற்போது கோயம்புத்தூர், தருமபுரி, திண்டுக்கல், கரூர், கிருஷ் ணகிரி, நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், சிவகங்கை, திருவண்ணாமலை, தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, வேலூர், ஈரோடு,

தேனி, மதுரை, காஞ்சிபுரம், விழுப்புரம், திருவள்ளூர், கடலூர் மற்றும் விருதுநகர் ஆகிய 24 மாவட்டங்களில் உள்ள 96 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பணிகள் கீழ்கண்ட அம்சங்களையும், செயல்பாடுகளையும் உள்ளடக்கியதாகும்.

நிலமேம்பாடு: நிலம் சமன்படுத்துதல், சமஉயர வரப்பு அமைத்தல், வண்டல் மண் அடித்தல், கல்வரப்பு அமைத்தல், தடுப்புச் சுவர் அமைத்தல், கோடை உழவு, தாவர வரப்பு அமைத்தல் மற்றும் தொடர் குழி எடுத்தல்.

நீர்வளமேம்பாடு: கால்நடைக்குட்டை அமைத்தல், பண்ணைக்குட்டை அமைத்தல், ஊரணி அமைத்தல், குளங்கள் தூர்வாருதல், வரத்துக்கால்வாய் அமைத்தல் மற்றும் சீரமைத்தல், தடுப்பணைகள் கட்டுதல், கசிவுநீர் குட்டை அமைத்தல், மற்றும் குடிநீர் ஆதாரமேம்பாடு செய்தல்.

தாவரவள மேம்பாடு: வேளாண் காடுகள் அமைத்தல், பழமரக்கன்றுகள் நடுதல், தீவனபயிர் மேம்பாடு செய்தல், செயல் விளக்கப்பாத்தி அமைத்தல், சமுதாய நாற்றாங்கால் பண்ணை அமைத்தல், சமூக காடுகள் வளர்த்தல் மற்றும் வீட்டுத் தோட்டம் அமைத்தல்.

இத்திட்டத்தின்கீழ் நீர்வடிப் பகுதிகள் மத்திய அரசால் திட்டவாரியாக ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. திட்டத்தின் செயலாக்கக் காலம் ஒப்பளிப்பு செய்யப்பட்ட காலத்திலிருந்து ஐந்து ஆண்டுகள் ஆகும். இத்திட்டத்தின்கீழ் 1999–2000 ஆம் ஆண்டு முதல் 2006–07 ஆம் ஆண்டு முடிய மொத்தம் 80 திட்டங்கள் மூலம் 910 நீர்வடிப் பகுதிகளில் ரூ.26,220.39 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் 4,57,596 எக்டர் நிலத்தை மேம்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை (31.03.2009) இத்திட்டத்திற்கு மத்திய மற்றும் மாநில அரசுகள் ரூ.19,933.05 இலட்சத்தை விடுவித்துள்ளன. இதில்

ரூ.18007.28 இலட்சம் 24 மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளால் செலவு மேற்கொள்ளப்பட்டு 3,06,854 எக்டர் நிலம் மேம்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டுவருகிறது. தற்போது செயல்படுத்தப்படும் 80 திட்டங்கள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | (ரூ. இலட்சத்தில்) |
|---|---|
| செயல்பாட்டிலுள்ள திட்டங்களின் எண்ணிக்கை | 80 |
| திட்டமதிப்பீடு | 26,220.39 |
| மத்திய அரசு | 24,241.43 |
| மாநில அரசு | 1,978.96 |
| விடுவிக்கப்பட்ட தொகை (மார்ச் 2009 வரை) | 19,933.05 |
| மத்திய அரசு | 18,528.34 |
| மாநில அரசு | 1,404.71 |
| செலவு செய்த தொகை (மார்ச் 2009 வரை) | 18,007.28 (90%) |
| மார்ச் 2009 வரை விடுவிக்கப்பட்ட தொகைக்கு மேம்படுத்த வேண்டிய பரப்பு (எக்டரில்) | 3,52,389 |
| மேம்படுத்தப்பட்ட பரப்பளவு (மார்ச் 2009 வரை) (எக்டரில்) | 3,06,854 (87%) |

ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டச் செயலாக்கத்திற்காக 2008–09 ஆம் ஆண்டு மத்திய அரசு ரூ.3460.07 இலட்சமும், மாநில அரசு தன் பங்காக ரூ.255.17 இலட்சமும் விடுவிக்கப்பட்டு இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.